விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 188 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 10 திங்கட்கிழமை (24.06.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

குருந்தூர்மலை, வெடுக்குநாறிமலையில்

## அனைவரும் சுதந்திரமாக வழிபட நடவடிக்கை

ஆதீனத்துக்கு வந்த அமைச்சர் விதுர உறுதி



(நல்லூர்)

யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ள 02

## பாடசாலைகள் வழமைபோல் இயங்கும்

(கொழும்பு)

நாட்டில் உள்ள அனைத்து பாடசாலைகளும் இன்று வழமைபோன்று இடம்பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

கல்வி அமைச்சு 11

## தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மாறும் அபாயம்



இறையாண்மைக்கு பாரிய சிக்கல் என்கிறார் பேராயர்

5 ஆம் பக்கம் பார்க்க

## யதார்த்தமற்ற கருத்துக்களை எதிர்க்கட்சிகள் தவிர்க்க வேண்டும்

நிதி இராஜாங்க அமைச்சர்



(கொழும்பு)

தேர்தல்கள் நெருங்கி வரும் வேளையில் எதிர்க்கட்சிகளும் அவற்றின் முக்கிய ஆலோசகர்களும் பொருளாதாரத்தை நிர்வகிப்பது தொடர்பில் யதார்த்தத்திற்கு மாறான கருத்துக் களை வெளியிடு 12

13ஐ அமுல்படுத்துவோம் என்று

# அநுரவும் சஜித்தும் நாடகம் ஆடுகின்றனர்

விளாசுகிறார் நீதி அமைச்சர் விஜயதாஸ



(கொழும்பு)

வடக்குக்குச் சென்று 13ஆவது திருத்தச் சட்டம் சம்பந்தமாகப் பேசுவதற்கு ஜே.வி.பிக்கு அருகதையில்லை என்று விமர்சனம் வெளியிட்டுள்ள நீதி அமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவும் தேர்தல் அண்மிக்கின்றமையால் 13ஆம் திருத்தம் தொடர்பில் நாடகமாடுகின்றார் என்று விமர்சித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## காசைக் காலால் உழக்கியது குற்றம்

வழக்குத் தாக்கல் செய்ய முடிவு

(யாழ்ப்பாணம்)

இலங்கையில் புழக்கத்தில் உள்ள நாணயத் தாள்களை காலில் போட்டு மிதித்து காணொளியில் கருத்துக்கூறி சர்ச்சையை ஏற்படுத்திய தொழிலதிபர் மீது யாழ்ப்பாணம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்யவுள்ளனர். 11

## எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணிலை சம்பந்தர் ஆதரிப்பார்

வஜிர அபேவர்த்தன நம்பிக்கை



(கொழும்பு)

“எதிர்வரும்ஜனாதிபதித்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் 11

## வெளிநாட்டு மோகம் காட்டி ரூ.80 இலட்சம் மோசடி

சந்தேகநபர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

லண்டனில் வேலை பெற்றுத் தருவதாக கூறியாழ்ப்பாண இளைஞனிடம் 80 இலட்சம் ரூபாயை பெற்று, மோசடி செய்த லண்டன் பிரஜாவுரிமை பெற்ற, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரொருவர் 11

## இனந்தெரியாதோரால் வீட்டின் மீது தாக்குதல்

முகமாலையில் சம்பவம்

(முகமாலை)

பளை முகமாலைப் பகுதியில் உள்ள வீடொன்று நேற்றிரவு இனந்தெரியாத நபர்களால் அடித்த நொருக்கப்பட்டதுடன் தீயும் வைக்கப்பட்டது. 02

தரம் ஒன்று மாணவர் அனுமதி

## புதிய சுற்றறிக்கை இன்று வெளியாகும்

(கொழும்பு)

அரச பாடசாலைகளில் தரம் ஒன்றிற்கு மாணவர்களை அனுமதிப்பது தொடர்பான சுற்றறிக்கையின் குறைபாடுகளை நிவர்த்தி 12

## நாளை மறுதினம் நாட்டு மக்களுக்கு ஜனாதிபதி விசேட உரை

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் புதன்கிழமை நாட்டு மக்களுக்கு விசேட உரையொன்றை ஆற்றவுள்ளார்.

நாட்டின் தற்போதைய பொருளாதார 12

## நீதி அமைச்சருக்கு எதிராக இன்று முக்கிய தீர்மானம்

பதவி பறிபோகவும் வாய்ப்பு



(கொழும்பு)

நீதி அமைச்சராக உள்ள விஜயதாஸ ராஜபக்ஷவின் கட்சி உறுப்புரிமையை நீக்குவது தொடர்பாக 11

நெடுந்தீவு இளைஞன் படுகொலை

## சந்தேக நபர் மூவர் பொலிஸாரால் கைது

(நெடுந்தீவு)

நெடுந்தீவு இளைஞன் படுகொலைச் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த மூன்று சந்தேகநபர்களும் நேற்று அதிகாலை நெடுந்தீவில் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணப் பிராந்திய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி சமன் பிரேமதிலக தலைமையிலான குழுவினர் மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்தனர்.

நெடுந்தீவு 7ஆம் வட்டாரப் பகுதியைச் 02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறாதென்றும் திகழும் உங்கள் நாளிதழ்

# டீல் அரசியலில் ஆட்சியாளர்கள் சஜித் பிரேமதாச குற்றச்சாட்டு



(கொழும்பு)

ஆட்சியாளர்களிடம் தமது தனிப்பட்ட தேவைகளுக்கு ஏற்ற திட்டங்களை செயற்படுத்த பணம் இருந்தாலும், பாடசாலைகளிலுள்ள குறைபாடுகளை களைவதற்கு அவர்களிடம் பணம் இல்லை என எதிர்கட்சி தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

அத்துடன், போலி வேலைகளுக்கு முடிவில்லாது பணம் ஒதுக்கீடு செய்வதாகவும், இந்தப் பணத்தில் டீல் அரசியலும் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பிரபஞ்சம் தகவல் தொழில்நுட்ப செயற்றிட்டத்தின் கீழ், 251ஆவது கட்டமாக 1,177,000 இலட்சம் ரூபாய் பெறுமதியான ஸ்மார்ட் வகுப்பறை உபகரணங்கள், குருநாகல், மாவத்தகம, பரகஹதெனிய தேசிய பாடசாலைக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதன்போது, பாடசாலை அபிவிருத்தி சங்கத்தினருக்கு 1 இலட்சம் ரூபாய் நிதி உதவியும் வழங்கி வைக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

"பிரபஞ்சம் மற்றும் மூச்சுத் திட்டங்களை முன்னெடுத்துவரும்போது பாராளுமன்றத்திலும், வெளியிலும் என் மீது கோபத்தை வெளிப்படுத்தி குரோதம் காட்டுகின்றனர்.

நான் பிள்ளைகளுக்கு மது, போதைப்பொருள், சிகரெட்டை பகிர்ந்தளிக்கவில்லை. கணினிகள், அகராதிகளையே பகிர்ந்தளிக்கிறேன். இவை தவறான விடயங்கள் அல்ல. ஆட்சியாளர்கள், தலைநகரின் ஆடம்பர குளிரூட்டி அறைகளில் இருந்து கொண்டு ஒரு குறிப்பிட்ட கும்பலுடன் டீலில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நாட்டிலுள்ள சாதாரண குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகள் உயர் மட்டத்தை அடைவதை அவர்கள் விரும்பவில்லை.

காலத்துக்கேற்ற நவீன கல்வியை வழங்காது, பழமைவாத கல்வியை வழங்குவதன் மூலம் இந்த பிள்ளைகளை அடிமைகளாக வைத்திருப்பதே அவர்களின் நோக்கமாக காணப்படுகின்றது.

புரட்சிகர கோஷங்களை எழுப்பும் கட்சிகள் அனைத்தும் தற்போது அரசாங்கத்துடன் டீலில் ஈடுபட்டுள்ளன.

மக்களின் வாக்குகளால் ஆட்சிக்கு வந்து மக்களையே காட்டிக்கொடுக்கும் அரசியல் கலாசாரம் இந்நாட்டில் காலா காலமாக இருந்து வருகிறது.

இந்நிலையை மாற்றியமைப்போம். பணத்துக்காக பிள்ளைகளையும் மக்களையும் ஏமாற்றி அவர்களின் கொள்கைகளை காட்டிக் கொடுக்கும் அரசியலும், டீல் அரசியலும் நாட்டில் காணப்படுகிறது.

நல்ல நல்ல அரசியல் டீல்களை எதிர்காலத்தில் கண்டு கொள்ளலாம். தமது சுய கௌரவத்துக்கு துரோகம் இழைத்து டீல் பேசும் அரசியல்வாதிகளுக்கு மக்கள் பதில் அளிப்பார்கள் என நம்புகிறேன் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மேலும் தெரிவித்துள்ளார். (ந-7,10)

## சிறுமிக்கு பாலியல் தொல்லை கொடுத்த அயலவர் கைது

### வவுனியாவில் சம்பவம்

வவுனியாவில் 3 வயதுச் சிறுமிக்குப் பாலியல் தொல்லை கொடுத்த நபரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

தாயார் கூலி வேலைக்குச் செல்லும்போது தனது பிள்ளைகளை அயல்வீட்டில் விட்டுச் செல்வது வழமையாக இருந்துள்ளது.

இந்நிலையில் அயல் வீட்டில் விட்டுச் சென்ற நிலையிலேயே, 3 வயதுச் சிறுமி பாலியல் தொல் லையை எதிர்கொண்டுள்ளார்.

இதனையடுத்து, வவுனியா பொலிஸ் நிலையத்தில் தாயார் அளித்த முறைப்பாட்டுக்கு அமைய, சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

மேலும், சிறுமி மருத்துவ பரிசோதனைக்காக வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கைதான நபரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதி மன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் வவுனியா பொலிஸார் தெரிவித்தனர். (ந-7,10)

## வீட்டில் துன்புறுத்தல் தாங்காது யாழ். பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்த கொழும்பு சிறுவன்

(யாழ்ப்பாணம்)

தனது தாயும் சித்தப்பாவும் தன்னை அடித்து துன்புறுத்துவதாகக் கூறி கொழும்பை சேர்ந்த 16 வயதுடைய சிறுவன் யாழ்ப்பாண பொலிஸ் நிலையத்தில் தஞ்சமடைந்துள்ளான்.

கொழும்பில் தனது தாய் மற்றும் சித்தப்பா (தாயின் இரண்டாவது கணவர்) ஆகியோர் அடித்து துன்புறுத்துவதால் வீட்டை விட்டு வெளியேறி யாழ்ப்பாணம் வந்ததாகவும், யாழ்ப்பாணத்தில் வேறு நபர்களை தெரியாத காரணத்தால் பொலிஸ் நிலையத்தில் தஞ்சம் கோரி வந்ததாகவும் சிறுவன் தெரிவித்துள்ளான்.

இது தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,10)

## அனைவரும்...

புத்தசாசன, மத மற்றும் கலாசார விவகாரங்களுக்கான அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க நேற்று நல்லை ஆதீனத்துக்கு விஜயம் செய்ததோடு அங்கு சமயத் தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் முன்னிலையில் இடம்பெற்ற இக்கலந்துரையாடலில் சிவபூமி அறக்கட்டளை அமைப்பாளர் கலாநிதி ஆறு. திருமுருகன், ரிஷிதொண்டுநாத சுவாமிகள் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இதன்போது குருந்தூர்மலை மற்றும் வெடுக்குநாறிமலையில் சைவ மக்கள் சுதந்திரமாக வழிபடுவதற்கு வகை செய்தல், காங்கேசன்துறையில் உள்ள ஆச்சிரமத்தின் காணி விடுவிப்பு, திருகோணமலை திருக்கோணேஸ்வரர் ஆலய வளாகத்திலுள்ள பெட்டிக்கடைகளை அகற்றுதல் உள்ளிட்ட கோரிக்கைகள் இந்து சமய தலைவர்களினால் முன்வைக்கப்பட்டது.

இதற்குப் பதிலளித்த அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க; குருந்தூர்மலை, வெடுக்குநாறி என்பன தொல்பொருள் திணைக்களக் கட்டுப்பாட்டின் கீழ் இருப்பினும் அனைத்து மதத்தவரும் பாரபட்சமின்றி சுதந்திரமாக வழிபட வழி செய்வதாக உறுதியளித்தார்.

மேலும் திருகோணமலையில் உள்ள சிறு கடைகளை அகற்றல் மற்றும் காங்கேசன்துறையில் உள்ள சைவாச்சிரமத்தின் காணி விடுவிப்பு தொடர்பிலும் பரிசீலிப்பதாக அவர் தெரிவித்தார். (ந-7,10)

## சந்தேக...

சேர்ந்த 22 வயதான இளைஞன் கடந்த புதன்கிழமை தாக்குதலுக்குள்ளான நிலையில் உயிரிழந்துள்ளார்.

சம்பவத்துடன் நான்கு சந்தேகநபர்கள் தொடர்புபட்ட நிலையில், ஒருவர் நெடுந்தீவு பொலிஸாரினால் கைது செய்யப்பட்ட நிலையில் மூவர் தலைமறைவாகியிருந்தனர்.

தலைமறைவாகியிருந்த மூன்று சந்தேகநபர்களையும் கைது செய்யக் கோரி கடந்த வெள்ளிக்கிழமை நெடுந்தீவு பொலிஸ் நிலையம் முன்பாக உயிரிழந்த இளைஞனின் சடலத்துடன் ஊரவர்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் தலைமறைவாகி நெடுந்தீவில் பற்றைக் காடுகளுக்குள் பதுங்கியிருந்தவர்கள் கைது செய்யப்பட்டு படகு மூலம் நேற்று அதிகாலை யாழ்ப்பாணம் கொண்டுவரப்பட்டனர்.

விசாரணைகளுக்கு பின்னர் நால்வரையும் நீதிமன்றத்தில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ந-7,10,33)

## இனந்தெரியா...

குறித்த வீட்டில் தாயும் மகளும் வாழ்ந்து வரும் நிலையில், மகள் பல்கலைக் கழகத்தில் கற்பதற்காகச் சென்றவேளை தாயார் அருகிலுள்ள உறவினர் வீட்டில் தங்கியிருந்த வேளை மேற்படிச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ந-7,10)

## அநுரவும்...

அரசியலமைப்பில் உள்ள 13ஆவது திருத்தச்சட்டத்தினை முழுமையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தயார் என்று எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவும் வடக்கு விஜயத்தின்போது தெரிவித்துள்ள கருத்துக்கள் தொடர்பில் குறிப்பிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதித் தேர்தலுக்கான காலம் நெருங்கிக்கொண்டு இருக்கிறது. இந்த தருணத்தில்தான் வடக்கு, கிழக்கு மக்கள் மீது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவுக்கும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்கவுக்கும் திடீர் கரிசனைகள் ஏற்பட்டுள்ளன.

இவர்கள் கடந்த காலத்தில் வடக்கு, கிழக்கு மக்கள் சம்பந்தமாக எந்தவிதமான கவனத்தையும் கொண்டது கிடையாது. அந்த மக்களின் அன்றாட பிரச்சினைகள் தொடர்பில் கூட திரும்பிப் பார்த்தது கிடையாது.

குறிப்பாக, ஜே.வி.பி. 13ஆவது திருத்தத்துக்கு எதிராக இதுகாலம் வரையிலும் தமது கடுமையான எதிர்ப்பினையே வெளியிட்டு வந்தார்கள். அது நடைமுறைப்படுத்தக்கூடாது என்பதற்காகக் படுகொலைகளைக் கூடச் செய்தார்கள்.

அத்தகையவர்களுக்கு 13ஆவது திருத்தச்சட்டம் சம்பந்தமாக பேசுவதற்கு எந்தவிதமான அருகதையும் இல்லை.

அதேபோன்று தான் சஜித் பிரேமதசவும் 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு எடுக்கப்பட்ட நடவடிக்கைகளின்போது எந்தவிதமான ஒத்துழைப்புக்களையும் செய்யாதே இருந்தார்.

தேர்தல் நெருங்கிவரும் நேரத்தில் வடக்கு மக்களிடத்தில் சென்று 13ஆவது திருத்தச்சட்டத்தினை நடைமுறைப்படுத்துவதாகவும் அதுபற்றி உரையாடுவதாகவும் கூறுகிறார். இதுவொரு தேர்தல் கால ஏமாற்று நாடகம்.

சஜித்தையும் அநுரவையும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு தமிழ் மக்கள் முட்டாள்கள் அல்லர். சஜித்தும் அநுரவும் தமது அரசியல் சுயலாபத்துக்காகவே இப்போது வடக்கு, கிழக்கு நோக்கி வருகின்றார்கள் என்பதை அந்த மக்கள் நன்கு அறிவார்கள் என்றார். (ந-7,10)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்க பிரிட்டன் மறுப்பு!

(லண்டன்)

**பிரித்தானியாவில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பை பயங்கரவாத அமைப்பாக அறிவித்து, விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குமாறு கோரி முன்வைக்கப்பட்ட மேன்முறையீடு நிராகரிக்கப்பட்டுள்ளது.**

தடை செய்யப்பட்ட அமைப்புகள் தொடர்பான மேன் முறையீட்டு ஆணைக்குழுவில் நாடு கடந்த தமிழீழ அரசாங்கத் தினால், முன் வைக்கப்பட்ட இந்த மேன் முறையீட்டினை அந்த ஆணைக்குழு ஏகமனதாக நிராகரித்துள்ளது.

இந்த மேன்முறையீடு தொடர்பில் மனுதாரர்கள் தரப்பினர்களிடம் விரிவான சாட்சிய விசாரணைகளை, கடந்த மார்ச் மாதம் 13 மற்றும் 14ஆம் திகதிகளில் குறித்த ஆணைக்குழு முன்னெடுத்திருந்தது.

இந்த நிலையில் அந்த மேன்முறையீடு தொடர்பான தீர்ப்பு கடந்த வெள்ளிக்கிழமை அறிவிக்கப்பட்டதுடன், இந்த முடிவு பிரித்தானிய நீதிமன்றத்திற்கும் அறியப்படுத்தப்பட்டுள்ளது. (நி)

## இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட 6 பேர் கைது

(கொழும்பு)

பொகவந்தலாவ மஹா எலிய வனப்பகுதியில் சட்ட விரோதமாக இரத்தினக்கல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச் சாட்டில் 6 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மஸ்கெலியா ரிகாட்டன் பொலிஸ் விசேட அதிரடிப் படையினரால் நேற்று அதிகாலை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் போது, குறித்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

இரத்தினக்கல் அகழ்விற்காகப் பயன்படுத்திய கருவிகளுடன் கைதான சந்தேக நபர்கள் மேலதிக விசாரணைக்காக பொகவந்தலாவ பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். சந்தேகநபர்களை ஹற்றன் நீதவான் நீதிமன்றில் பொலிஸார்முன் னிலைப்படுத்தவுள்ளனர். (6)

## அநுராதபுரத்தில் கோர விபத்து இருவர் பலி; இருவர் படுகாயம்

(கொழும்பு)

அநுராதபுரத்தில் இடம் பெற்ற கோர விபத்தில் இரண்டு இளைஞர்கள் உயிரிழந்துள்ளதுடன் இருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



பாதெனிய பிரதான வீதியில் நேற்று காலை முச்சக்கரவண்டியும் பேருந்தும் நேருக்கு நேர் மோதியதில் குறித்த விபத்து ஏற்பட்டுள்ளதாகம் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் காயமடைந்தவர்கள் தலாவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் அனுராதபுரம் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளனர்.

இதேவேளை எப்பாவல காவல்துறை பிரிவிற்குட்பட்ட மடியாவ பிரதேசத்தில் வசிக்கும் 24 மற்றும் 19 வயதுடைய இரு இளைஞர்களே குறித்த விபத்தில் உயிரிழந்துள்ளனர்.

இரத்தினபுரியில் இருந்து யாழ்ப்பாணம் நோக்கி சுற்றுலா வந்து கொண்டிருந்த பேருந்தும், அனுராதபுரத்தில் இருந்து தலாவ நோக்கி பயணித்த முச்சக்கர வண்டியும் நேருக்கு நேர் மோதியதாலே இந்த விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

அநுராதபுரத்தில் இடம் பெற்ற பொசன் கொண்டாட்டத்தில் கலந்து விட்டு இளைஞர்கள் குழு வீடு திரும்பிக் கொண்டிருந்த போதே இவ்விபத்து நேர்ந்துள்ளது.

இதேவேளை பேருந்து சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை தலாவ பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (நி-6)

## தெங்கு உற்பத்திகளின் ஏற்றுமதி வருமானம் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் தெங்கு உற்பத்தி சார்ந்த பொருட்களின் ஏற்றுமதி வருமானம் 20% அதிகரித்துள்ளதாக தென்னை அபிவிருத்தி அதிகார சபை தெரிவித்துள்ளது.

இதற்கமைய 330 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளதாக அதன் தலைவர் பேராசிரியர் ரொஷான் பெரேரா தெரிவித்துள்ளார். (நி-6)

## முன்பள்ளி ஆசிரியர்களுக்கு அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு இம் மாதம் முதல் வழங்கப்படும்

(கொழும்பு)

முன்பள்ளி ஆசிரியர்களுக்கான அதிகரிக்கப்பட்ட கொடுப்பனவு இம்மாதம் முதல் வழங்கப்படும் என மகளிர், சிறுவர் விவகாரங்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிரதேச செயலகங்கள் மற்றும் மாவட்ட செயலகங்களுக்கு விசேட சுற்றறிக்கை ஊடாக அறிவிக்கப்பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் யமுனா பெரேரா தெரிவித்துள்ளார்.

தற்போது 2,500 ரூபாவாக காணப்படும் கொடுப்பனவை 5,000 ரூபாவாக அதிகரிக்க அண்மையில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-6)

## ஐக்கிய மக்கள் சக்தியில் இணையவுள்ள 7 எம்.பிக்கள்

(கொழும்பு)

அரசாங்கத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் 7 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஐக்கிய மக்கள் சக்தியில் இணைய தயாராக இருப்ப தாக பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார தெரிவித்துள்ளார்.

அந்த எம்பிக்கள் ஏற்கனவே ஐக்கிய மக்கள் சக்தியில் இணைவதற்கான இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளதாகவும், அவர்கள் உள்வாங்கப்பட்டதன் பின்னர் வழங்கப்படும் பொறுப்புகள் தொடர்பிலான இறுதிக்கட்ட பேச்சு வார்த்தை இடம் பெறவுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்வரும் அனைத்து தேர்தல்களும் ஐக்கிய மக்கள் கூட்டணியின் கீழ் போட்டியிடும் எனவும், ஐக்கிய மக்கள் கூட்டணியினை வெளிக் கொணர அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (6)

## பறவைக் காய்ச்சல் தொடர்பில் அச்சம் கொள்ளத் தேவையில்லை

### சுகாதார அமைச்சு விளக்கம்

(கொழும்பு)

தற்போது பல்வேறு நாடுகளில் பரவி வரும் பறவைக் காய்ச்சல் நோய் தொடர்பில் இலங்கைக்கு இதுவரை எந்த ஆபத்தும் ஏற்படவில்லை என சுகாதார அமைச்சர் ரமேஷ் பத்திரன தெரிவித்துள்ளார்.

எனவே தேவையற்ற அச்சத்தை மக்கள் மத்தியில் ஏற்படுத்த தேவையில்லை எனவும், பறவைக் காய்ச்சல் தொடர்பான அபாயகரமான சூழல் இல்லையென்றாலும், அது தொடர்பில் விசேடமாக ஆராய்ந்து வருவதாகவும் கூறியுள்ளார்.

மேலும் தெரிவிக்கையில், "குறிப்பாக இவ்வாறான நோயினால் எந்த ஆபத்தும் இல்லை என்பதை இலங்கை மக்களுக்கு நாம் கூற வேண்டும்.

உலக சுகாதார நிறுவனம் எமக்கு விசேட எச்சரிக்கையை வழங்கவில்லை. பறவைக் காய்ச்சல் வழக்குகள் இதற்கு முன்னர் உலகின் பல்வேறு நாடுகளில் இருந்து பதிவாகியுள்ளன.

ஆனால் அவை பரவலாக இல்லை. எனவே இது தொடர்பில் தேவையற்ற அச்சம் வேண்டாம் என அவர் தெரிவித்தார். (நி-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## ஆஸி ஏமாற்றம் ஆப்கான் அசத்தல்



ரி-20 உலகக் கிண்ண தொடரில் நேற்றுக் காலை நடைபெற்ற சூப்பர் 8 போட்டியில் ஆப்கானிஸ்தான் மற்றும் அவுஸ்திரேலியா அணிகள் மோதின. இந்தப் போட்டியில் டாஸ் வென்ற அவுஸ் திரேலியா அணி முதலில் பந்துவீச்சை தேர்வு செய்தது.

பட்டிங்கை தொடங்கிய ஆப்கானிஸ் தான் அணிக்கு தொடக்க வீரர்களான ரஹ்மனுல்லா குர்பாஸ் மற்றும் இப்ராகிம் ஜத்ரன் அரைசதம் அடித்து சிறப்பான தொடக்கம் கொடுத்தனர். இந்த ஜோடி முறையே 60 மற்றும் 51 ரன்கள் எடுத்த நிலையில், ஆட்டமிழந்தனர்.

அடுத்து வந்த வீரர்கள் சொற்ப ரன்களில் ஆட்டமிழக்க, ஆப்கானிஸ்தான் அணி 20 ஓவர்கள் முடிவில் 6 விக்கெட்டுகளை இழந்து 148 ரன்களைச் சேர்த்தது. அவுஸ்திரேலியா சார்பில் பட் கம்மின்ஸ் இந்த போட்டியிலும் ஹட் ரிக் விக்கெட் வீழ்த்தினார்.

149 ரன்களை துரத்திய அவுஸ்திரேலியா அணிக்கு தொடக்கமே அதிர்ச்சி காத்திருந்தது. அந்த அணியின் டிராவிஸ் ஹெட்ரன் ஏதும் எடுக்காமலும், டேவிட் வார்னர் 3 ரன்களுக்கும் ஆட்டமிழந்தனர். அடுத்து வந்த கப்டன் மிட்செல் மார்ஷ் 12 ரன்களில் ஆட்ட மிழந்தார்.

இவரைத் தொடர்ந்து களமிறங்கிய கிளென் மேக்ஸ் வெல் அதிரடியாக ஆடி அரைசதம் கடந்தார்.

போட்டி முடிவில் அவுஸ்திரேலியா அணி 19.2 ஓவர்களில் 127 ரன்களுக்கு அனைத்து விக்கெட்டு களையும் இழந்தது. இதன் மூலம் ஆப்கானிஸ்தான் அணி 21 ரன்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

ஆப்கானிஸ்தான் சார்பில் குலாப்தீன் நயிப் 4 விக்கெட்டுகளையும், நவீன் உல் ஹக் 3 விக்கெட்டு களையும் வீழ்த்தினர். அஸ்மதுல்லா ஓமர்சாய், முகமது நபி மற்றும் ரஷித் கான் தலா 1 விக்கெட் வீழ்த்தி னர். (நி-6)

## பும்ராவிற்கு பெருமை சேர்த்த ஐ.சி.சி



இந்திய கிரிக்கெட்டின் தலை சிறந்த வீரராக பும்ரா திகழ்ந்து வருகிறார். டெஸ்ட் ஒருநாள் 20 ஓவர் போட்டிகள் என மூன்று வடிவிலான கிரிக்கெட்டிலும் அசத்தி வருகிறார்.

கடந்த பெப்ரவரி மாதம் ஐ.சி.சி.இன் டெஸ்ட் போட் டியின் பந்து வீச்சாளர்கள் தரவரிசையில் பும்ரா முதல் இடத்தை பிடித்தார். முதன் முறையாக பும்ரா முதல் இடத்திற்கு முன்னே றினார்.டெஸ்ட் கிரிக்கெட் வரலா ற்றில் இந்திய வேகப்பந்து வீச்சாளர் இது வரை முதல் இடத்தை பிடித்தது கிடையாது. பும்ரா முதல் இடத்தை பிடித்து வரலாற்று சாதனையை பதிவு செய்தார்.

தற்போது நடந்து வரும் 20 ஓவர் உலகக் கிண்ணத்தில் இந் திய அணியின் தொடர் வெற்றிகளுக்கு பும்ரா கார ணமாக இருக்கிறார்.

இந்நிலையில், சர்வதேச கிரிக் கெட் கவுன்சில் தனது பேஸ்புக் மற்றும் எக்ஸ் பக்கத்தில் கவர் போட்டோவாக பும்ராவின் புகைப் படத்தை வைத்து பும்ராவுக்கு பெருமை சேர்ந்துள்ளது. (நி)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3150

### தருண்




### வருண்




### ராகவி




### திவ்யா




### சக்தி




### சுலக்ஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்நாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மாறும் அபாயம்

## இறையாண்மைக்கு பாரிய சிக்கல் என்கிறார் பேராயர்

**(கொழும்பு)** — **இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையிலான உத்தேச பாலத்தின் ஊடாக எதிர்காலத்தில் இலங் கையின் இறை யாண்மைக்கு பாரிய பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் எச்சரிக்கை விடுத்துள் ளார்.**

செய்தியாளர் சந்திப்பொன்றில் கலந்து கொண்டு அவர் இதனைக் குறிப்பிட்டுள் ளார்.

இவ்வாறு பாலம் அமைப்பதன் ஊடாக 2,000 வருடங்களாக பாதுகாக்கப்பட்ட சுதந் திரம் இல்லாமல் போகக்கூடும்.

இந்தியாவிற்கும் இலங்கைக்கும் இடையி லான பாலத்தை அமைப்பதன் மூலம் தமிழ் நாட்டின் ஒரு பகுதியாக இலங்கை மாறிவிடும்.

அரசாங்கம் முன்மொழிந் துள்ள இந்த பாலம் அமைக்கும் திட்டத்தை தாம் முற்றிலும் எதிர்ப்பதாகவும் இந்தியர் களும் இதனை எதிர்க்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)


## கண்ணீர் அஞ்சலி



எமது பாடசாலை ஆசிரியர்
திரு.த.அருளரசன்
அவர்களின் மாமியார்

திருமதி. ஸ்ரீனிவாசன்
ஜெகதாம்பிகை

அவர்கள் 10.06.2024 அன்று இயற்கை எய்தியுள்ளார். அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டி நிற்கின்றோம்.

ஓம்சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அதிபர், ஆசிரியர்கள், கல்வி சாரா ஊழியர்கள்,
யா/சில்லாலை றோ.க.த.க பாடசாலை.



சிவமயம்

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய அழைப்பிதழ்

தோற்றம் – 31 – 12 – 1964



மறைவு – 28 – 05 – 2024

கடந்த 28.05.2024 செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### அமரர்.பரமநாதன் நேசராசா

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 25.06.2024 நாளை செவ்வாய்க்கிழமை காலை 7.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக் கரையிலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 27.06.2024 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

(சி-666)

குமாரசாமி வீதி,
புத்தூர் கிழக்கு புத்தூர்.

தகவல்– குடும்பத்தினர்.
077 288 2713



## 7 ஆம் ஆண்டு நினைவில் | 3 ஆம் ஆண்டு நினைவில்



அமரர்.
கந்தையா நாகம்மா
பிறப்பு: 1944.02.12
இறப்பு: 2017.01.27

எங்கள் வீட்டின் குலவிளக்குகளே உங்கள் அன்பு ஒளி குன்றேறிய தீபம் போல் என்றென்றும் மங்காது ஒளிர்ந்திடும். இவ்வுலகை விட்டு நீங்கள் மறைந்தாலும் எங்கள் நெஞ்சில் என்றென்றும் உங்கள் ஒளி வீசிடுமே.



அமரர்.
ரவிச்சந்திரன் விஜிதா
பிறப்பு: 1973.03.22
இறப்பு: 2021.06.27

(1309)

உரும்பிராய் வடக்கு,
ச.ச.ச நிலையம், உரும்பிராய்.

உங்கள் நினைவில்
குடும்பத்தினர்.


## இராசிபலன்

24.06.2024
ஆனி 10 திங்கட்கிழமை
திருதியை பின்னிரவு 3.27 மணிவரை
உத்தராடம் பிற்பகல் 5.59 மணிவரை

சுபநேரம் 11.05-1.25 மணிவரை
இராகு காலம்-7.25-8.55 மணிவரை

சந்திராஷ்டமம்.
ரோகிணி, மிருகசீரிடம்.

வளவன்

**மேஷம்** நினைத்த காரியத்தை நினைத்த நேரத்தில் செய்து முடிப்பீர்கள், வெளியூர்த் தொடர்பு கள் அனுகூலம் தரும், தொலை பேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம்.

**கடகம்** வராத உறவினர்கள் உங்களின் வீட்டுக்குத் திடீரென வரலாம், அன்பு நண்பர்களின் ஆதரவு பெருகும், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறுவீர்கள்.

**துலாம்** ஊக்கத்தோடும் உற் சாகத் தோடும் பணி புரிவீர்கள், வீட்டைச் சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவர்க ளுக்கு கைகொடுத்து உதவுவீர் கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்பட லாம், வழிபாட்டால் வளர்ச்சி கூடும், பெரியோர்களின் உதவியால் சில நன்மைகள் ஏற்படலாம்.

**ரிஷபம்** சுணங்கிய காரியங் களில் முன்னேற்றம் காண்பீர்கள், பிரிய மான சிலரோடு ஏற் பட்ட மனஸ்தாபங்கள் அகலும், தித்திக்கும் பயணங்கள் இடம் பெறலாம்.

**சிம்மம்** இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நோயிலி ருந்து நிவாரணம் பெறுவீர்கள், இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும் நாள்.

**விருச்சிகம்** பாராட்டும் புகழும் கூடும் நாள், வரு மானம் திருப்தி தரும் வகையில் அமையும், வெற்றி தரும் செய்திகள் வீடு வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**கும்பம்** சிறிய வேலையொன் றுக்காக பலமுறை அலைய நேரிடலாம், பயணத்தால் பலன் கிடைக்கும், இறைவழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள்.

**மிதுனம்** சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, ஆரோக்கியத்தில் கவ னம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**கன்னி** வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பிள்ளைகள் வழி யில் பெருமை தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**தனுசு** ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், நீண்ட நாளைய விருப்ப மொன்று நிறைவேறும் வாய்ப் புண்டு, பூர்வீகச் சொத்து சம்பந் தப்பட்ட வகையில் நன்மையுண்டு.

**மீனம்** பணப்புழக்கம் அதிக ரிக்கும் நாள், விலை உயர்ந்த பொருட்களை வாங்கும் வாய்ப் புண்டு, அரசு தொடர்பான காரிய ங்கள் அனுகூலமாக அமையும்.

உழைப்பால் உடல் நலமும் உள்ள நிறை-வும் உண்டாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர்களிடையே வேகமாக பரவும் சுவாச நோய்

(கொழும்பு)

**தற்போது நிலவும் குளிர் மற்றும் மழையுடனான காலநிலை காரணமாக சிறுவர்கள் மத்தியில் பல்வேறு நோய் பரவல் அதிகரித்துள்ளதாக விசேட வைத்திய நிபுணர் சன்ன டி சில்வா தெரிவித்துள்ளார்.**



பல்வேறு வைரஸ் தொற்றுகள் காரணமாக சுவாச அமைப்பு தொடர்பான நோய்கள் அதிகரித்துள்ளதாகவும் அதனால் காய்ச்சல், சளி போன்ற நோய்கள் சிறுவர்களிடையே அதிகமாக பரவுவதாகவும் தெரிவித்தார்.

இந்த நோய்கள் மிக இலகுவாகப் பரவும் என்பதால், சிறுவர்களை முடிந்த வரை பாதுகாப்பது மிகவும் அவசியமானது.

தற்போது நிலவும் குளிர் மற்றும் மழையுடனான காலநிலை காரணமாக சிறுவர்கள் மத்தியில் வயிற்றுப்போக்கு அதிகரித்துள்ளதாகவும், வைரஸ் காய்ச்சலுக்குப் பின்னரே சிறுவர்களுக்கு வயிற்றுப் போக்கு அடிக்கடி ஏற்படுவதாகத் தெரிவித்தார். (6)

## எல்லை தாண்டி மீன் பிடித்த குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்கள் கைது

(யாழ்ப்பாணம்)

இலங்கை கடற்பரப்பில் மீன் பிடித்த குற்றச்சாட்டில் 18 இந்திய மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் நேற்று ஞாயிற்றுக்கிழமை அதிகாலை கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நெடுந்தீவு கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகுகளையும் அதிலிருந்த 18 இந்திய மீனவர்களையும் எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கடற்படையினர் கைது செய்தனர்.

கைதான மீனவர்கள் மயிலிட்டி மீன்பிடித் துறைமுகத்திற்கு அழைத்துச் செல்லப்படுவதுடன், கைதானவர்களை கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களத்தினரிடம் ஒப்படைத்து ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது. (நி-33)

## பொன்சேகாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்

### ரஞ்சித் மத்துமபண்டார

(கொழும்பு)

கட்சித் தலைமையை விமர்சிக்கும் பாராளுமன்ற உறுப்பினர் சரத்பொன்சேகாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துமபண்டார தெரிவித்துள்ளார்.

அதன்படி, கட்சிக்குள் இருந்து கொண்டு தலைமையை விமர்சிப்பது ஏற்புடையது அல்ல எனவும் சரத் பொன் சேகா ஜனாதிபதியுடன் இணைவதற்கு தயாராகி வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.


ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன்சேகா கடந்த வார பாராளுமன்றில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவை மறைமுகமாகத் தாக்கிப் பேசியிருந்தார்.

இவ் விடயம் தற்போது பேசுபொருளாக மாறியதையடுத்து, எதிர்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஷ்மன் கிரியெல்ல இது குறித்து பதிலளித்திருந்தார்.

அதன்படி, கட்சி மீது வழக்கு தொடுத்து தலைமையை விமர்சிக்கும் ஒருவருக்கு எவ்வாறு பாராளுமன்றத்தில் கால அவகாசம் வழங்க முடியும் என எதிர்கட்சியின் பிரதம கொறடா லக்ஷ்மன் கிரியெல்ல கேள்வி எழுப்பியுள்ளார்.

எவ்வாறாயினும் பாராளுமன்ற உறுப்பினர் சரத் பொன் சேகாவை ஐக்கிய மக்கள் சக்தியிலிருந்து நீக்குவது தொடர்பில் எந்தவொரு தீர்மானமும் எடுக்கவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (6)

# எரிந்த நிலையில் மோ.சைக்கிள் மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கோப்பாய் இராச பாதையில் மோட்டார் சைக்கிள் ஒன்று நேற்று முன்தினம் சனிக்கிழமை இரவு 11 மணியளவில் எரிந்த நிலையில் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திலிருந்து சுமார் 20 மீற்றர் தொலைவில் மோட்டார் சைக்கிளின் இலக்கத் தகடு மற்றும் கோடரி ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது.

மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் அடையாளம் காணப்படாத நிலையில் சம்பவம் தொடர்பாக கோப்பாய் பொலிஸார் விசாரணைகளை மேற் கொண்டு வருகின்றனர். (நி-33)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(சாவகச்சேரி)

என் கனவு யாழ் அக்கடமி ஊடாக யாழ்.மாவட்டத்தில் இலவச கோடிங் கணணிப் பயிற்சி நெறியைப் பயிலும் மாணவர்களுக்கான முதற்கட்ட சான் றிதழ் வழங்கும் வைபவம் எதிர்வரும் 30 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு யாழ்ப்பாணம் முற்றவெளி மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மேற்படி சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் பாராளுமன்ற உறுப்பினர்களான டிபி எடியுகேசன் நிறுவுனர் தம்மிக்க பெரேரா மற்றும் என் கனவு யாழ் அறக்கட்டளை நிறுவுனர் அங்கஜன் இராமநாதன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

இந் நிகழ்வில் யாழ்.மாவட்டத்தில் கோடிங் கற்கையின் முதல் பாகத்தை பூர்த்தி செய்த சுமார் மூவாயிரம் மாணவர்கள் சான்றிதழ்களைப் பெற்றுக் கொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.(நி-30)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 450 | 400 | 350 | 250-400 | 380 |
| உருளைக்கிழங்கு | 180 | 220 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 120 | 120 | 120-150 | 150 |
| தக்காளி | 700 | 800 | 700 | 650 | 700 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 150 | 120 | 100-130 | 150 |
| கோவா | 350 | 350 | 300 | 350 | 300 |
| கரட் | 350 | 550 | 450 | 450 | 460 |
| பூசணி | 200 | 180 | 180 | 150 | 150 |
| புடோல் | 160 | 300 | 180 | 200 | 240 |
| வாழைக்காய் | 180 | 150 | 150 | 120-150 | 180 |
| சின்ன வெங்காயம் | 400 | 450 | 250-350 | 300-550 | 340 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 220 | 250 | 250 |
| பாகற்காய் | 1000 | 1000 | 1000 | 700 | 1400 |
| வெண்டக்காய் | 200 | 250 | 200 | 250 | 250 |
| கருணைக் கிழங்கு | 160 | 200 | 150 | 150 | 150 |
| பயற்றங்காய் | 350 | 300 | 250 | 300-350 | 350 |
| லீக்ஸ் | 600 | 650 | 700 | 450 | 700 |
| பீற்றூட் | 800 | 500 | -- | 400 | 700 |
| கறிமிளகாய் | 600 | 700 | 800 | 500 | 700 |
| முருங்கைக்காய் | 1400 | 1500 | -- | 600-1000 | 1200 |
| போஞ்சி | 800 | 700 | 800 | 400 | 900 |
| கத்தரிதம்புள்ள | 400 | 300 | 300 | -- | 250 |
| கீரை - 1 பிடி | 50 | 50 | 100 | 100-120 | 50 |
| தேசிக்காய் | 1200 | 1000 | 700 | 800-1000 | 800 |
| தேங்காய் (ஒன்று) | 100 | 110 | 80 | 60-100 | 90-120 |
| இராசவள்ளி | 450 | 500 | 450 | 300 | 450 |
| வெங்காயப்பூ | 500 | 450 | 500 | -- | 430 |
| முள்ளங்கி | 160 | 200 | 200 | 350 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 90 | 100 | 100 | 50 |
| வல்லாரை | 60 | 40 | 50 | 100 | 50 |
| [illegible] | 150 | 200 | -- | 80 | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்புலன்ஸ் சேவை ரத்து

# நோயாளர்கள் நிர்க்கதி!

## சேவையை மீள ஆரம்பியுங்கள் மக்கள் கோரிக்கை

(அக்கராயன்)


**முல்லைத்தீவு ஐயன்கன்குளம் மருத்துவமனையில் இரு மாதங்களாக அம்புலன்ஸ் வண்டி சேவையில் ஈடுபடா ததால் நோயாளர்கள் சிரமங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.**

இவ் மருத்துவமனை யினை நம்பி ஐயன்கன் குளம், பழையமுறி கண்டி, புத்துவெட்டுவான் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் வாழ்கின்றனர்.

ஐயன்கன்குளம் மருத்து வமனையில் இருந்து மல் ஸலாவி ஆதார மருத் துவ மனை 15 கிலோ மீற்றர் தூரத்தில் உள்ளது. ஐயன்கன்குளம் மருத்து வமனையில் இருந்து நோயா ளர்களை மல்லாவி ஆதார மருத்துவமனைக்கு கொண்டு செல்வதற்கு அம்புலன்ஸ் வண்டி பயன்படுத்தப்பட்டு வந்த நிலையில் தற்போது இரு மாதங்களாக அம்பு லன்ஸ் வண்டி சேவை யில் இல்லாததன் காரண மாக நோயாளர்கள் சிர மங்களை எதிர் கொண்டுள் ளனர்.

ஐயன்கனகுளம் மருத்து வமனையில் அம்புலன்ஸ் வண்டி பணியில் இல்லா ததன் காரணமாக நோயா ளர்கள் கிளிநொச்சி, மல் லாவி மருத்துவ மனை களுக்கு பெரும் சிரமங்க ளுக்கு மத்தியில் பயணித்து வருகின்றனர். இது தொடர் பில் சம்பந்தப்பட்ட தரப் புக்கள் நோயாளர்களின் நலன் கருதி நடவடிக்கை எடுக்க வேண்டும் என அப் பகுதி மக்கள் வேண்டு கோள் விடுத்துள்ளனர்.(நி-6-350)

# கனகபுரம் வீதியில் கப்ரக வாகனம் விபத்து



(தருமபுரம்)

கிளிநொச்சி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கனகபுரம் வீதியில் நேற்று அதி காலை சாரதியின் கட்டுப் பாட்டை மீறிய கப்ரக வாக னம் தொலைத் தொடர்பு தூண்கள் மீது மோதி விபத்துக்குள்ளானது .

இதன்போது இரண்டு தொலைத்தொடர்பு தூண் களும் கப்ரக வாகனமும் சேதமடைந்துள்ளன. வாகன சாரதி தெய்வாதீனமாக தப்பி யுள்ளார்

சம்பவம் தொடர் பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலி ஸார் முன்னெடுத்து வருகின்ற னர். (நி-6-316)






The saivite Tamil Foundation USA அமைப்பின் நிதி அனுசரணையில் இல.76, வைத்தியசாலை வீதி சத்திரச்சந்திக்கு அப்பால் நோயாளிகளின் உறவினர்களுக்கான சிவசி இல்ல சேவை மையம் கடந்த திங்கட்கிழமை பொது மக்களின் பயன்பாட்டுக்கு திறந்து வைக்கப்பட்டுள்ளது.

(படம்- சிவசாந்தன்)

கல்யாணமாலை

சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
| --- | --- |
| பிறப்பு: 1980 இந்து<br>நட்சத்திரம்: பூரம்<br>உயரம்: 5'5"<br>கி.பா: 70 2 இல் செவ்<br>தகைமை/தொழில்: O/L , Driver<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>தொ.இ: B/9270 | பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: விசாகம்<br>1 இல் செவ்வாய்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்: Pharmacist, DEMO<br>எதிர்பார்ப்பு: அரச. தனியார் தொழில்<br>தொ.இ: G/12426 |
| பிறப்பு: 1993 இந்து<br>நட்சத்திரம்: ரேவதி<br>உயரம் :5'8"<br>தகைமை/தொழில்: HNDE(Civil Engineering), To<br>எதிர்பார்ப்பு- படித்த தொழில் புரியும் மணமகள்<br>தொ.இ: B/14019 | பிறப்பு-2001 இந்து<br>நட்சத்திரம்- உத்திராடம்<br>கி.பா: 17<br>உயரம் : 5'4"<br>தகைமை/தொழில்: Software Engineer<br>எதிர்பார்ப்பு: வெளிநாடு<br>தொ.இ: G/12941 |
| பிறப்பு: 1989 இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா: 12<br>உயரம்:5'5" 1 இல் செவ்<br>தகைமை/தொழில்: Bsc, QS<br>எதிர்பார்ப்பு: நற்குணமுள்ள மணமகள்<br>இ: B/14401 | பிறப்பு-1995 இந்து<br>நட்சத்திரம்: பரணி<br>உயரம் :5'2"<br>தகைமை/தொழில்: B.Pharm, Demo<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14052 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 515





கிடைக்கும் என்று தெரிகிறது தங்களுடைய சின்னஞ்சிறு விருப்பத்தை நிறைவேற்றுவதற்காக அவன் தன் உயிரையே அர்ப்பணம் செய்வான் என்று ரேகைகள் மிகத்தெளிவாகச் சொல்லுகின்றன.

இவ்விதம் கூறிக்கொண்டே பார்த்திபேந்திரன் சட்டென்று நந்தினியின் விரிந்த இரு கரங்களையும் பற்றித் தன் கண்களில் ஒற்றிக் கொண்டான்.

நந்தினி கைகளை உதறி விடுவித்துக்கொண்டு, "சீச்சீ! இது என்ன காரியம் செய்தீர்?" என்றாள்.

"மன்னியுங்கள்! இவை தங்கள் கரங்கள் என்பதை மறந்து விட்டேன். இரண்டு செந்தாமரை மலர்கள் என்று எண்ணிக் கொண்டேன்" என்றான்.

"பழுவேட்டரையர் பார்த்திருந்தால் உம்மை ஈட்டி முனையில் கழுவேற்றிருப்பார்!"

"தேவி! தங்களுக்காகக் கொடுப்பதற்கு எனக்கு இருப்பது ஓர் உயிர்தானே என்று கவலைப்படுகிறேன்."

"அந்த ஓர் உயிரையும் இப்படிக் கொடுப்பானேன்? இந்த அநாதைப் பெண்ணுக்கு உதவி செய்வதற்காகக் காப்பாற்றி வைத்துக் கொண்டிருங்கள்!"

"என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்! சோழ சாம்ராஜ்யம் தாயாதிக் கலகத்தினால் பாழாகிவிடாமல் காப்பாற்றப்பட வேண்டும். அதற்குத் தங்களுடைய உதவி வேண்டும்."

"எப்படி?" தங்கள் சிநேகிதர் கரிகாலரைக் கடம்பூர் சம்புவரையர் வீட்டுக்கு அழைத்து வாருங்கள். சம்புவரையருக்கு ஒரு பெண் இருக்கிறாள். அவளை ஆதித்த கரிகாலருக்கு மணம் செய்து விட்டால் என் மனோரதம் பூர்த்தியாகும்.

இந்த அற்பக் காரியத்துக்குத்தானா இவ்வளவு பீடிகை? ஆதித்த கரிகாலரை அவசியம் கடம்பூருக்குக் கொண்டு வந்து சேர்க்கிறேன். அப்புறம்?

ஆதித்த கரிகாலருக்குச் சம்புவரையர் மகளைக் கலியாணம் செய்து வைத்து விட்டால் கலகம் பாதி தீர்ந்து விட்டதாகும். சோழ சாம்ராஜ்யத்தில் மதுராந்தகருக்குத் தென்பாதியும் கரிகாலருக்கு வடபாதியும் என்று பிரித்துக் கொடுத்துவிட்டால் கலகம் முழுதும் தீர்ந்ததாகும்."

பின்னர்? எனக்கு ஏற்பட்டிருக்கும் கெட்ட பெயர் போய்விடும். பிறகு என் தலைவிதியை நானே நிறைவேற்றிக் கொள்வேன். நடுக்கடலில் விழுந்து உயிரை விடுவேன்."

நான் பின் தொடர்ந்து வந்து தங்களைக் காப்பாற்றுவேன். நம் இருவருடைய புனர் ஜன்மம் ஆரம்பமாகும். கடல்களைக் கடந்து தூரதேசங்களுக்குச் செல்வோம். அங்கே தங்களுக்காக ஒரு மாபெரும் ராஜ்யத்தை ஸ்தாபிப்பேன்.

"ஐயா! இப்படியெல்லாம் பேசவேண்டாம். தென் தமிழ் நாட்டுப் பத்தினிப் பெண்களின் மரபில் வந்தவள் நான். பழுவேட்டரையரின் தர்ம பத்தினி.

தேவி! என்னிடம் உண்மையைச் சொல்லுங்கள். இந்தக் கிழவரை எதற்காக மணந்து கொண்டீர்கள்? இவர் பேரில் காதல் உண்டா? அல்லது இவருடைய பலாத்காரத்திற்காகவா? நந்தினி பெருமூச்சு விட்டாள்.

"ஆனால் அவள் அரைகுறையாக சாஸ்திரம் படித்தவள் என்று தெரிகிறது. இந்தக் கைரேகையில் ஒன்று அற்பாயுளைக் குறிப்பது உண்மைதான் ஆனால் மற்றொரு ரேகை அந்தக் கண்டத்தைக் கடந்து புனர் ஜன்மம் ஏற்படும் என்றும் கூறுகிறது.


அந்தப் புனர்ஜன்மத்துக்குப் பிறகு கடல் கடந்த பல நாடுகளுக்குப் பிரயாணம் செய்யும் பாக்கியம் உண்டு என்றும் மன்னாதி மன்னர்களுக்குக் கிட்டாத ஆனந்த வாழ்க்கை வெகுகாலம் உண்டு என்றும் கூறுகிறது. இவ்வளவும் தற்செயலாகக் கடற்கரையில் சந்தித்த ஒரு யௌவன புருஷனுடைய உண்மை அன்பினால்

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## சிங்கத்தோல் போர்த்திய கழுதை



ஒரு அடர்ந்த காடு. அந்த காட்டின் பக்கத்துக் கிராமத்தில் இருந்து ஒரு கழுதை வழி மாறி அந்த காட்டிற்குள் வந்தது. அந்த கழுதை வரும் வழியில் பல விலங்குகள் பயத்துடன் ஓடிக்கொண்டிருந்ததாம். அதில் ஒரு மானும் இருந்தது.

அப்பொழுது அந்த கழுதை மானிடம் ஏன் அனைவரும் இப்படி வேகமாக பயத்துடன் ஓடி செல்கின்றனர் என்று கேட்டது. அதற்கு மான் இந்த காட்டில் சிங்கம் ஒன்று உள்ளது. அதனை கண்டுதான் நாங்கள் அனைவரும் இப்படி ஓடுகின்றோம் என்று கூறிவிட்டு சென்றது.

இருப்பினும் கழுதை சிங்கத்தின் வீரத்தை தெரிந்து கொண்டே அந்த காட்டிற்குள் சென்றது. சிறிது தூரம் கடந்து சென்றதில் கழுதை களைப்படைந்துவிட்டது. பின் கழுதை அந்தக் காட்டிற்குள் ஒரு ஓடையைப் பார்த்தது.

பின் கழுதை தண்ணீர் அருந்த அந்த ஓடைக்கு சென்றது. அங்கே சில வேட்டைக்காரர்கள் தாங்கள் வேட்டையாடிய மான், புலி, சிங்கம் போன்ற விலங்குகளின் தோலை அங்கிருந்துப் பாறைகள் மேல் உலர வைத்திருந்தனர்.

அதனைப் பார்த்த கழுதைக்கு ஒரு ஆசை வந்தது. உடனே ஒரு சிங்கத்தின் தோலை எடுத்துக் தன் உடன்பின் மேல் போர்த்திக் கொண்டது. அந்த கழுதையும் பார்ப்பதற்கு சிங்கம் போலவே இருந்ததினால் மற்ற விலங்குகளும் கழுதையைச் சிங்கம் என்று நினைத்து பயந்து ஒதுங்கி சென்றன.

மிருகங்கள் அனைத்தும் தன்னைப் பார்த்துப் பயந்து மரியாதையாக வழி விட்டு ஒதுக்குவதை பார்த்த கழுதைக்கு கர்வம் தலைக்கு ஏறியது. சிறிது தூரம் அந்த கழுதை அந்த காட்டில் உலவி கொண்டிருந்தது, அப்பொழுது அங்கு ஒரு நரியை பார்க்கிறது.

சரி இந்த நரியையும் பயமுறுத்தலாம் என்று நினைத்து, நரியின் அருகில் சென்றது நரியும் பயத்தில் நடுங்கிக் கொண்டே "சிங்க ராஜா, நான் தெரியாமல் இந்த பக்கம் வந்துவிட்டேன் இனி நான் இந்த காட்டிற்கே வரமாட்டேன் என்று கழுதையிடம் கூறியது.

கழுதையும் சிங்கத்தை போல கர்ஜிக்கணும் என்று நினைத்து கத்தியது. ஆனால் அதனுடைய குரல் நரிக்கு காட்டிக் கொடுத்தது. அதன் பிறகு அந்த கழுதையை நரி மதிக்கவே இல்லை.

அதுவும் இல்லாமல் "எனக்கு கோபம் வருவதற்குள் இங்கிருந்து சென்றுவிடு" என்றது கழுதை.

அதற்கு நரியோ கழுதையைப் பார்த்து முடியாது என்று பதில் கூறியது. மேலும் நரி கழுதையிடம், நீ சிங்கம் போன்று வேஷம் போட்டாலும் உன்னுடைய உண்மையான குணத்தை உன்னால் மாற்ற முடியாது என்று கூறியது.

கழுதையும் அவமானத்தில் தலை குனிந்தது. அதன் பிறகு தனது வேடத்தை கலைத்து விட்டு, தனது உண்மையான உருவத்தில் சென்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீ செய்யும் பாவமே உன்னைக் காட்டிக் கொடுத்து விடும். – பைபிள்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வடக்கு மாகாண நிர்வாகம் தீவகத்தை ஓரங்கட்டி விட்டது

யுத்த அனர்த்தங்களால் கடுமையாகப் பாதிப்படைந்த பிரதேசங்களில் தீவகம் முதன் நிலையில் வைக்கக்கூடியது.

ஆம், 1990ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் கோட்டையில் உள்ள இராணுவத்தை மீட்பதற்காக, ஊர்காவற்றுறை ஊடாக இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

இதன் காரணமாக ஊர்காவற்றுறைப் பட்டினமும் வேலணை, மண்கும்பான், அல்லைப்பிட்டி, மண்டைதீவு ஆகிய ஊர்களும் பேரழிவைச் சந்தித்ததுடன் நூற்றுக்கணக்கான அப்பாவி மக்கள் கொல்லப்பட்டனர்.

தவிர, மண்டைதீவு – அல்லைப்பிட்டியில் வைத்து இராணுவத்தால் கூட்டிச் செல்லப்பட்ட 25 இளைஞர்களுக்கு என்ன நடந்ததென்பது இன்னமும் தெரியவில்லை.

மாறாக, மண்டைதீவில் இராணுவத்தால் மூடப்பட்ட தோட்டக்கிணறுகள் சிலவற்றை மீள அகழ்ந்தபோது, அங்கு மனித எலும்புக் கூடுகள் மீட்கப்பட்டன.

ஆம், யாழ்.பல்கலைக்கழக மருத்துவபீடம் இது விடயத்தில் கடும் பிரயத்தனம் எடுத்து மூடப்பட்ட கிணறுகளைத் தோண்டி மனித எச்சங்களை எடுத்து ஆய்வு செய்ததாயினும் அது விடயத்தில் மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய பொறுப்பு அரச தரப்பினுடையதென்பதால், அந்த விவகாரம் அப்படியே அமுங்கிப்போனது. இப்போது அவை பேசாப் பொருளாகிவிட்டன.

அதேநேரம் 1991ஆம் ஆண்டு தீவகம் முழுமையும் படையினர் ஆக்கிரமித்தபோது, தீவக மக்கள் அங்கிருந்து வெறுங்கையோடு பண்ணைக் கடலைத் தாண்டினர்.

1991ஆம் ஆண்டு தீவகத்தில் ஏற்பட்ட இடப்பெயர்வு தீவகம் என்ற ஒரு பெரும் பண்பாட்டுப் பிரதேசத்தை நிர்மூலமாக்கியது.

ஆம், 1996ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்குப் பின்னர் தீவகத்தில் மக்கள் மீளக் குடியமரக் கூடியதான சந்தர்ப்பம் ஏற்பட்டதாயினும் அதற்கான வசதிகளையும் வளங்களையும் வடக்கு மாகாண அரச நிர்வாகம் செய்யத் தவறியதால், தீவகத்தின் மீள்குடியமர்வு படுதோல்வி கண்டது.

அதன் தாக்கம் இன்று வரை நீடித்து நிற்கிறது.

ஆம், தீவகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பில் வடக்கு மாகாண நிர்வாகம் எந்த நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

கல்வியியல் கல்லூரியை, யாழ்.பல்கலைக்கழகத்தின் ஒரு பீடத்தை, உயர்கல்வி நிறுவகத்தை, தொழில்நுட்பக் கல்லூரியை, தொழிற்பயிற்சி நிலையத்தை என எதுவும் தீவகத்தில் நிறுவப்படவில்லை.

ஆக, அங்கு பதற்றமான சூழ்நிலையிலேயே மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

மாணவி வித்தியா முதல் கடந்த 20ஆம் திகதி நெடுந்தீவில் நடந்த இளைஞனின் கொலை வரையில் தீவகம் மிகவும் பின்னடைந்த பிரதேசமாக வஞ்சிக்கப்பட்டுள்ளது.

இதுவிடயத்தில் தமிழ் அரசியல் தரப்புகளும் தீவகத்துக்குத் துரோகம் இழைத்தனர் என்பது நிராகரிக்க முடியாத உண்மை.

# ரணில் தேர்தலில் வெற்றிபெற பலமற்றவர்;

## சஜித்தின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது

### எம்.பி சந்திம வீரக்கொடி தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் விக்கிரமசிங்க, தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதில் பலமற்றவர் சஜித் பிரேமதாஸாவின் வெற்றியை யாராலும் தடுக்க முடியாது என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் சந்திம வீரக்கொடி தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது மேலும் கருத்து தெரிவித்த அவர், ரணில் விக்கிரமசிங்க தேர்தலில் போட்டியிடுவாராக இருந்தால் எமது கட்சி மேலும் வலுப்பெறும்.

ஏனெனில் அவர் தேர்தலில் போட்டியிட்டு வெற்றி பெறுவதில் பலமற்றவர். அவரைப் போன்ற ஒருவர் வேட்பாளராக முன்னிலையாவாராக இருந்தால், அவருடன் இருப்பவர்களும் எம்முடன் வந்து இணைந்துகொள்வார்கள்.

பிள்ளையான் போன்ற தீவிரவாத குழுக்களுடன் தொடர்புடைய தலைவர்கள், முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுடன் இருந்தமையினாலேயே, வடக்கு - கிழக்கு மக்கள் மகிந்த ராஜபக்ஷவை நிராகரித்தனர் எனவும் தெரிவித்தார். (ந-7,10)

# ஊடகவியலாளரின் வீட்டை தாக்கியவர்கள் உடனடியாகக் கைது செய்யப்பட வேண்டும்

### எம்.ஏ.சுமந்திரன் தெரிவிப்பு

(அச்சுவேலி)

ஊடகவியலாளரின் வீட்டை தாக்கியவர்களும் அதனை செய்வித்தவர்களும் உடனடியாகக் கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

கடந்த 13ஆம் திகதி அச்சுவேலியைச் சேர்ந்த ஊடகவியலாளர் தம்பித்துரை பிரதீபனின் வீடு தாக்கப்பட்டு வாகனங்களும் எரியூட்டப்பட்டமை தொடர்பில் சுமந்திரன் நேற்று நேரில் சென்று பார்வையிட்டார்.

இதன்போது அவர் கருத்து தெரிவிக்கையில், ஊடகவியலாளர் ஒருவரின் வீடுக்குத் தாக்குதலை மேற்கொண்டமை மிலேச்சத்தனமானதும் கண்டிக்கத்தக்கதுமான விடயமாகும். எனவே, இதற்குப் பொறுப்பானவர்களும் இதனை செய்வித்தவர்கள் எவரும் இதுவரை கைது செய்யப்படவில்லை. இந்த விடயத்தை செய்தவர்களும் செய்வித்தவர்களும் உடனடியாக கைது செய்யப்பட்டு சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் என்றார். (ந-7,10)

# ஜனநாயகத் தமிழ்த் தேசிய கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று

ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் நிறைவேற்றுக் குழுக் கூட்டம் இன்று பிற்பகல் ஒரு மணியளவில் வவுனியா கோவிற்புளியங்குளத்தில் உள்ள தனியார் விடுதியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன் புளொட் தலைவர் சித்தார்த்தன், ஈ.பி.ஆர்.எல்.எப். இன் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் தமிழ்த் தேசியக் கட்சியின் தலைவர் சிறீகாந்தா மற்றும் ஜனநாயகப் போராளிகள் கட்சியின் பிரதிநிதிகள் ஆகியோரும் நிறைவேற்றுக் குழுவின் ஏனைய அங்கத்தவர்களும் பங்கேற்கவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தின் போது ஜனாதிபதி தேர்தலில் தமிழ் பொதுவேட்பாளர் தொடர்பில் ஜனநாயக தேசியக் கூட்டணி இறுதித் தீர்மானம் எடுக்கப் படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஏற்கனவே பொதுவேட்பாளர் தொடர்பில் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியில் அங்கத்துவங்களைக் கொண்டிருக்கும் அரசியல் கட்சிகளுடன் தனித் தனியாக உரையாடல்களை செய்திருந்த நிலையில், அக்கட்சிகள் தமது கட்சிகளின் உயர்மட்டக் குழுவினருடன் ஆராய்ந்துவிட்டு பதிலளிப்பதாக குறிப்பிட்டிருந்தன.

அதனடிப்படையில், ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப் ஆகிய கட்சிகள் தனித்தனியாக கூடி தமிழ் பொதுவேட்பாளரை ஆதரிப்பதாக தீர்மானம் எடுத்து அறிவித்திருந்தன. இந்நிலையில் இன்றைய சந்திப்பு நடைபெறவுள்ளது. (ந-7,10)

# கார் உரிமத்தை மாற்ற முயன்ற சாரதி

### கைதாகி பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

வெளிநாட்டில் வசிக்கும் பெண்ணொருவரின் சொகுசுக் காரை, மோசடி செய்யும் நோக்கில் உரிமை மாற்றம் செய்ய முயன்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பெண்ணொருவர் தனது பெயரில் சொகுசுக் கார் ஒன்றினை கொள்வனவு செய்து, அதற்கு சாரதி ஒருவரையும் நியமித்திருந்தார்.

தற்போது அந்தப் பெண் வெளிநாட்டில் வசித்துவரும் நிலையில், வாகனத்துக்கு இந்த ஆண்டுக்கான வரி அனுமதிப்பத்திரம், புகை பரிசோதனை செய்வதற்கு வாகன பதிவு புத்தகம் உள்ளிட்ட ஆவணங்கள் தேவை என கூறி வெளிநாட்டில் வசிக்கும் பெண்ணிடம் சாரதி அவற்றை பெற்றுள்ளார்.

வாகன பதிவு புத்தகம் உள்ளிட்ட ஆவணங்களை கொண்டு, காரை தனது பெயருக்கு மாற்றம் செய்ய சாரதி முயற்சித்துள்ளார். இந்த விடயம் வாகன உரிமையாளருக்கு தெரிய வந்ததையடுத்து, அவரால் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

முறைப்பாட்டின் பிரகாரம் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் கார் சாரதியை கைது செய்து, மல்லாகம் நீதவான் நீதிமன்றில் முற்படுத்தினர். நீதிமன்ற விசாரணைகளில் சந்தேகநபர் தன் மீதான குற்றச்சாட்டை ஏற்றுக் கொண்டதையடுத்து, அவரை பிணையில் செல்ல அனுமதித்த நீதிமன்றம், வாகன பதிவு புத்தகம் உள்ளிட்ட வாகனம் சார்ந்த அனைத்து ஆவணங்களையும் உரிமையாளரான பெண்ணிடம் மீள ஒப்படைக்க உத்தரவிட்டது. (ந-7,10)

# கிளிநொச்சியில் கைகலப்பு இளைஞனின் கை துண்டிப்பு

கிளிநொச்சி பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விநாயகபுரம் பகுதியில் நேற்று இரவு இடம்பெற்ற தகராறில் கை துண்டாடப்பட்ட நிலையில் இளைஞன் ஒருவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த சம்பவத்தில் விநாயகபுரம் பகுதியைச் சேர்ந்த செந்தில்குமார் தனுஜன் எனும் 18 வயதுடைய இளைஞனின் கையே துண்டாடப்பட்டுள்ளது.

காதல் விவகாரத்தில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக இச்சம்பவம் இடம்பெற்றுள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரிய வருகிறது. (ந-7,10,100)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

# கச்சோலம்


டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

**Botanical Name - Kaempferia galanga**
**Family - Zingiberaceae**
**Sinh - Ininguru piyali**

இதுசிறு செடிவகையைச் சேர்ந்த வாசனையுள்ள தாவரமாகும். குழாயுருவான நார்த்தன்மையான சதைப்பற்றான வேர்த்தொகுதியைக் கொண்டது. இலை குறுக்காகவும் நிலத்திற்கு சமாந்தரமாகவும் 6.2 செ.மீ தொடக்கம் 12.5 செ.மீ நீளமும், 4.3 செ.மீ தொடக்கம் 8.7 செ.மீ அகலமும் உடையதாகும். நீண்ட இலைகள், பச்சை நிறமுடையதாகவும் இருப்பதோடு, குறுகிய இலைக் காம்புடையதாகக் காணப்படும்.

ஒழுங்கற்ற இருபாலான வெண்ணிறப் பூக்கள் காணப்படும். தாவரத்தின் நடுப் பகுதியில் இலைகளுக்கு நடுவில் பூக்கள் இருக்கும்.


இதன் கனிகள் நீள்வட்ட மெல்லிய உறையால் மூடப்பட்டு இருப்பதோடு அதனுள் விதைகள் காணப்படும். இச் செடியில் ஆனி, ஆடி மாதங்களில் பூக்களை அவதானிக்கலாம்.

**இனவிருத்தியும் பரம்பலும்**

விதைகள் மூலம் இனவிருத்தி அடையும்.இச் செடியை தோட்டங்களில் பயிரிட்டு வளர்க்கலாம். மட்ட நிலத் தண்டை பயிரிட்டும் இன விருத்தி செய்யலாம்.

**மருத்துவப் பயன்கள்**

இதன் மட்ட நிலத்தண்டு (Rhiyome) மருத்துவப் பயன் மிக்கதாகும். இம்மட்ட நிலத்தண்டுகளை





சேகரித்து சிறுசிறு துண்டுகளாக்கி தோலை மெலிதாக உரித்து நிழலில் உலர்த்த வேண்டும். பின் பொடி செய்து 2 - 3 கிராம் அளவு தேனில் கலந்து காலை, மாலை வழங்க இருமல், நாட்பட்ட இருமல் தீரும்.

பசியின்மை மற்றும் சமிபாடு அடையாமை ஆகியவற்றுக்கு இதன் உலர்ந்த அல்லது உடன் சேகரித்த மட்ட நிலத் தண்டுகளை தோலுரித்து, 40 கிராம் அளவு எடுத்து 250 மில்லி நீர்விட்டு 1/4 பங்காக வற்றக் காய்ச்சி 30 மில்லி அளவு காலை, மாலை குடிக்க கொடுக்க குணமாகும்.

இதன் மட்ட நிலத்தண்டுகளை சேகரித்து நன்கு கழுவி பட்டுப் போலரைத்து உடம்பு முழுவதும் பூசி விட்டு 1/2 மணிநேரம் ஊறவிட்டு குளிக்க கரப்பான், சிரங்கு ஆகியன தீருவதுடன். தோல் மினுமினுப்பாகவும், வியர்வை மணமுமின்றி இருக்கும்.

இதன் மட்ட நிலத்தண்டுகளை எடுத்து தோல் நீக்கி நிழலில் உலர்த்தி இடித்து, பொடித்து ஒன்று தொடக்கம் 2 கிராம் அளவு வெந்நீரில் கலந்து குடிக்க வயிற்றுப் புண் தீருவதுடன், பசி ஏற்படும்.

மட்ட நிலத்தண்டுகளை பொடி செய்து 35 கிராம் அளவு எடுத்து 250 மில்லி நல்லெண்ணெயில் போட்டுக் காய்ச்சி பதத்தில் வடித்து தேகவலி அடிபட்ட வலி என்பவற்றிற்கு இட்டுத் தேய்க்கலாம்.

நன்கு பொடித்த மட்ட நிலத்துண்டுகளின் தூளை வெந்நீரில் கரைத்து, அடிமயிரில் படும்படி தலையில் வைத்து நன்கு தேய்த்து பூசி முழுகிவர பொடுக்குத் தொல்லை (dandruff) முற்றாக நீங்கும்.

செழிப்பான மட்ட நிலத்தண்டுகளை எடுத்து தோலைச்சீவி இடித்துச் சாறு எடுத்து வடித்து, 30 மில்லி அளவு எடுத்து 200 மில்லி வரை காய்ச்சிய பசும்பாலில் கலந்து குடிக்க உடலுக்கு பலத்தைக் கொடுக்கும்.

மிளகு, திப்பிலி, ஓமம், இந்துப்பு, வசம்பு, சாதிக்காய், உள்ளி,கஸ்தூரி மஞ்சள் மற்றும் கச்சோலம் ஆகிய ஒவ்வொன்றும் 10 கிராம் அளவு எடுக்க வேண்டும்.

விளக்கெண்ணெய் அல்லது ஆமணக்கெண்ணெய் சிறிது மைபோல கரைத்து எடுத்து அதில் 200 மில்லி ஆமணக்கெண்ணெயில் கரைத்து அடுப்பில் வைத்துக் காய்ச்ச பின் மெழுகுபதத்தில் இறக்கி ஆறிய பின் வடித்து. புட்டியில் அடைத்து வைக்க வேண்டும்.

இதனை கர்ப்பம் ஏற்படாத பெண்கள் மாதவிலக்கு ஏற்பட்டு தலை முழுகிய மறுநாள் தொடக்கம் நாளொரு வேளையும் ஒரு தேக்கரண்டி வீதம் 15 தினங்களுக்கு கொடுக்க வேண்டும். பின்னர் அடுத்த மாதவிலக்கு ஏற்பட்டு 13 நாட்கள் தொடர்ந்து மீண்டும் கொடுத்துவர கர்ப்பம் உண்டாகும். இது குருதி நோய் போன்றவற்றிற்கும் சிறந்ததாகும். அத்துடன் கர்ப்பசெயத்தைப் பலப்படுத்தக் கூடியது மாகும்.

உணவு உண்ட பின்பு சிறிது வெற்றிலை, பாக்கு, கச்சோலம் ஒரு துண்டு சேர்த்து சாப்பிட்டு வர உணவு நன்கு சமிபாடடையும்.

மஞ்சள், கஸ்தூரி மஞ்சள், இலாமிச்சுவேர், சந்தனக்கட்டை, பாசிப்பயறு, றோசாப்பூவிதழ், கச்சோலம், வட்டத் துருத்தி வேர்ப்பட்டை மற்றும் பாகல் இலை (உலர்ந்தது) ஆகிய இலைகளில் ஒவ்வொன்றிலும் 50 கிராம் அளவு எடுத்து கழுவி, நிழலில் நன்கு உலர்த்தி, நுண்ணிய பொடியாக பொடி செய்து அரித்து குப்பியில் அடைத்து வைத்துக் கொள்ளவும்.

பின் இதனை குளியல் பொடியாக உடம்பு முழுவதும் பூசி ஒரு மணி நேரம் சென்ற பின்பு இளஞ்சூட்டு நீரில் குளித்துவர தோல் நோய்கள் எல்லாம் தீருவதுடன் தோல் நல்ல பளபளப்பாகவும் வியர்வை நாற்றம் இன்றியும் காணப்படும்.

## இன்று ஒரு தகவல் 162


தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# அற்புதங்களின் ஆதாரம்

ஒரு ஊரை ஒட்டி ஓர் ஆறு ஓடிக்கொண்டிருந்தது. அந்த ஆற்றிற்கு அடுத்த கரையில் ஒரு காடு. அந்தக் காட்டுக்குள்ளே ஒரு ஆசிரமம். அந்த ஆசிரமத்தில் ஒரு குரு இருந்தார்.

அந்தக் கிராமத்தில் ஒரு அம்மா பால் விற்பனை செய்து கொண்டிருந்தர். ஆச்சிரமத்தில் உள்ள குருவிற்கும் தினமும் பால் கொண்டு போய்க் கொடுப்பது அந்த அம்மா தான். வேளா வேளைக்கு சரியாகக் கொண்டு போய் கொடுப்பார்.

ஒரு சமயம் அந்த ஆற்றில் வெள்ளம் அளவிற்கு அதிகமாக ஓடிக் கொண்டிருந்தது. அதனால் படகுப் போக்குவரத்து சற்று தாமதப்பட்டது. இந்த அம்மாவால் சரியான நேரத்திற்கு ஆச்சிரமத்திற்கு போய்ச் சேரமுடியவில்லை.

அந்தக் குருவிற்கு கோபம் வந்து விட்டது. “வேளா வேளைக்கு ஒழுங்காக வருவதில்லையா ஏன் இப்படி?" என்று கோபித்துக் கொண்டார். “நான் என்ன செய்வது? தினமும் பொழுது விடிவதற்கு முன்பே வீட்டை விட்டு வந்து விடுகிறேன்.

இருந்தாலும் அந்த ஆற்றங்கரையில் வந்து காத்துக்கொண்டிருக்க வேண்டியிருக்கிறது. ஓடக்காரன் வந்து சேர்வதற்கு அதிக நேரம் ஆகிவிடுகின்றது" என்று சொன்னார் அந்த அம்மா.

அந்தக் குரு இதைக் கேட்டதும் சிரித்தார். “என்னம்மா நீ இப்படி சொல்கிறாய்! பகவானுடைய நாமத்தை உச்சரித்துக் கொண்டு பலர் பிறவி என்கின்ற பெரிய கடலையே தாண்டிவிடுகிறார்கள். நீ என்னம்மா இந்தச் சிறிய ஆற்றைக் கடப்பதற்கு ஓடக்காரனை நம்பிக்கொணடிருக்கிறாயே" என்றார்.

கள்ளங்கபடமில்லாத அந்த அம்மா இந்தப் பெரியவர் கூறியதை அப்படியே நம்பிவிட்டார். ஆற்றைக் கடப்பதற்கு சுலபமான வழி அந்த அம்மாவிற்கு தெரிந்து விட்டது. அடுத்த நாளிலேயிருந்து அந்த குருவிற்கு நேரத்திற்கு பால் கிடைத்துக் கொண்டு வந்தது.

ஒரு நாள் அந்த அம்மாவைப் பார்த்துக் கேட்டார் “ஏனம்மா? இப்போதெல்லாம் நீ நேரத்திற்குச் சரியாகப் பால் கொண்டு வந்து கொடுக்கிறாயே அது எப்படி?" என்றார். “நீங்கள் தானே சுவாமி அதற்கு வழி சொல்லிக் கொடுத்தீர்கள்" என்றார் அந்த அம்மா. “என்ன வழி சொல்லிக் கொடுத்தேன்?" என்றார் அவர். “இப்போது எல்லாம் நான் அந்த ஓடக்காரனுக்காக காத்துக் கொண்டிருப்பதில்லை. பகவான் நாமத்தை சொல்லிக் கொண்டு ஆற்றைக் கடந்து வந்துவிடுகிறேன்" என்றார் அந்த அம்மா.

சுவாமி வழி சொல்லிக் கொடுத்தாரே தவிர அது எப்படி ஆண்டவன் பெயரைச் சொன்னால் ஆற்றின் மேலே நடக்க முடியும்? என்ற சந்தேகம் அவருக்கு. “என்னை அழைத்துச் சென்று நேரில் அதைக் காட்டு" என்றார். சரி என்று இருவரும் அந்த ஆற்றங்கரைக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

ஆண்டவன் பெயரைச் சொல்லிக் கொண்டு அந்த அம்மா கிடுகிடு என்று சர்வசாதாரணமாக தண்ணீரின் மேலே நடந்து போக ஆரம்பித்தார். சிறிது தூரம் சென்ற பின் திரும்பி சுவாமியைப் பார்த்தார். இவர் காலை வைத்தால் அது தண்ணீருக்குள்ளே போகிறது. மிகவும் சிரமப்பட்டுக் கொண்டிருந்தார்.

“என்ன இது? நானும் பகவான் நாமத்தைத் தான் சொல்கிறேன். என்னால் தண்ணீரின் மேல் நடக்க முடியவில்லையே" என்றார். அதற்கு அந்த அம்மா “சுவாமி என்ன இது? பகவான் நாமத்தை வாயால் சொல்கிறீர்கள். ஆனால் அதே நேரம் துணி எங்கே நனைந்து விடுமோ என்ற பயத்தால் அதை கையால் தூக்கிப்பிடித்துக் கொண்டிருக்கிறீர்களே. அப்படி என்றால் உங்களுக்கு பகவானிடம் பரிபூரண நம்பிக்கை இல்லையா?" என்றார்.

அதற்குப் பின் தான் அந்த வெகுளிப் பெண்மணி கூறிய வார்த்தையினுடைய தத்துவம் அந்த சுவாமிக்கு விளங்க ஆரம்பித்தது. தீவிரமான நம்பிக்கை, பரிபூரண சரணாகதி இது தான் அற்புதச் செயல்களுக்கு ஆதாரம் என்பதை புரிந்து கொள்வதற்காக இந்தக் கதையை ராமகிருஷ்ணர் கூறியிருக்கிறார்.

இந்தக் கதையைக் கேட்ட இந்தக் காலத்து குடும்பஸ்தர் ஒருவர், “எங்கள் குடும்பத்தில் சண்டை சச்சரவு இது வரைக்கும் வந்ததில்லை சார். அதற்குக் காரணம் நான் கடைப்பிடிக்கின்ற இந்தத் தத்துவம் தான்" என்றார்.

அது என்ன தத்துவம் என்றார்கள்.

“பரிபூரண சரணாகதி" என்றார் அவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாடசாலைகள்...

விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டு இதனைக் குறிப் பிட்டுள்ளது.

இன்று மற்றும் நாளை சுகவீன விடு முறையை அறிவித்து தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகக் கல்வி சாரா ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கல்வி மற்றும் கல்விசாரா சேவையிடம் தொடர்பில், தேசிய கொள்கையைத் தயாரிக்குமாறு கோரி இந்த தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

இந்த நிலையிலேயே இன்று பாடசாலை நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெறும் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ந-7,10)

## வெளிநாட்டு...

கைது செய்யப்பட்டுள்ளார்.

கைதான நபர் அண்மையில் யாழ்ப்பாணம் வந்திருந்தவேளை, லண்டனில் உள்ள பல்பொருள் அங்காடியொன்றில் வேலை பெற்றுத் தருவதாகக் கூறி இளைஞனிடம் 80 இலட்சம் ரூபாய் பணத்தினைப் பெற்றுள்ளார்.

பணத்தைப் பெற்றுக்கொண்ட சந்தேக நபர், இளைஞனை லண்டனுக்கு அனுப்புவதற்கான நடவடிக்கைகளை எடுக்காததால், சந்தேகம் கொண்ட இளைஞன் தனது பணத்தை மீளத் தருமாறு கோரியுள்ளார்.

பணத்தைத் திருப்பித் தராததால் இளைஞன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்ததையடுத்து, பொலிஸாரினால் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

வெளிநாடுகளில் பிரஜாவுரிமை பெற்றவர்கள் வெளிநாடுகளில் வேலை பெற்றுத் தருவதாக யாழ்ப்பாண இளைஞர்கள், யுவதிகளை இலக்கு வைத்து பண மோசடியில் ஈடுபட்டு வரும் சம்பவங்கள் யாழ்ப்பாணத்தில் அதிகரித்து வருவதாகவும்,

இது தொடர்பில் விழிப்பாக இருக்குமாறும் பொலிஸார் பொதுமக்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (ந-7,10)

## காசைக்...

யாழ்ப்பாணத்தில் அண்மையில் சமூக ஊடகம் ஒன்றிற்குக் கருத்து தெரிவித்த பிரஸ்தாபத் தொழிலதிபர், தனது சட்டை பையில் இருந்த பெருமளவான ஐந்து ஆயிரம் ரூபாய் தாள்களை எடுத்து நிலத்தில் போட்டு சப்பாத்து காலால் மிதித்துள்ளார்.

குறித்த காணொளி சமூக வலைத்தளங்களில் வைரலாகியதையடுத்து நேற்றையதினம் குறித்த தொழிலதிபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட யாழ்ப்பாணம் பொலிஸார் வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுத்துள்ளனர்.

2023ஆம் ஆண்டின் 16ஆம் இலக்க இலங்கை மத்திய வங்கிச் சட்டத்தின் 55ஆம் பிரிவின் நியதிகளில் இலங்கை மத்திய வங்கியினது ஆளுகைச் சபையின் அதிகாரமின்றி எந்தவொரு நபரும், நாணய தாள்களை வெட்டுதல், துளையிடுதல் அல்லது வேறு ஏதேனும் வழிகளில் உருச்சிதைத்தல், முத்திரை பதித்தல் அல்லது எதனையும் வரைதல் ஆகியவை தண்டனைக் குரிய குற்றமாகும் என்பது குறிப்பிடத் தக்கது. (ந-7,10)

## நீதி அமைச்...

இன்று ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தீர்மானிக்கவுள்ளது.

அதன் அகில இலங்கை செயற்குழுக் கூட்டம் இன்று கொழும்பில் இடம்பெறவுள்ள நிலையில், அமைச்சர் விஜயதாஸவிற்கு எதிரான பிரேரணை முன் வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும் என அந்தக் கட்சியின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினராக இருந்து கொண்டே, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியின் தலைமைப் பதவியை ஏற்றுக்கொண்டதன் ஊடாக, விஜயதாஸ ராஜபக்ஷ ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி யாப்பை மீறி இருப்பதாகக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் அவரது கட்சி உறுப்புரிமை பறிக்கப்பட்டால், அவர் தமது பாராளுமன்ற உறுப்புரிமையையும் இழக்க நேரும் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ந-7,10)

## எதிர்வரும்...

எடுப்பார் என்று நம்புகின்றோம். அந்தத் தீர்மானத்துக்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இணங்குவார்கள் என்றும் நம்புகின்றோம்" இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான வஜிர அபேவர்த்தன தெரிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

"இலங்கையில் மிகவும் அரசியல் அனுபவம் வாய்ந்த சிங்களத் தலைவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முக்கிய இடம் வகிக்கின்றார். அதே வேளை, மிகவும் அரசியல் அனுபவம் வாய்ந்த தமிழ்த் தலைவர்களில் இரா.சம்பந்தன் முக்கிய இடத்தில் உள்ளார். இருவரும் தவிர்க்க முடியாத ஆளுமைகள்.

எதிர் வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் தீர்மானத்தைத் இரா. சம்பந்தன் எடுப்பார் என்று நம்புகின்றோம்.

அந்தத் தீர்மானத்துக்கு வடக்கு - கிழக்கு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களும் இணங்குவார்கள்

எனவே, வடக்கு - கிழக்கு தமிழ் மக்களின் அமோக வாக்குகளால் ரணில் விக்கிரமசிங்க வெற்றி பெறுவார் என்பது திண்ணம். ஜனாதிபதித் தேர்தலில் இம்முறை ரணில் விக்கிரமசிங்க வரலாற்று வெற்றியை நிலை நாட்டுவார் என்றும் நம்புகின்றோம். அதே வேளை தமிழ்ப் பொது வேட்பாளர் பயனற்ற விடயம்.

அதைப் பற்றிப் பேசி நாம் அலட்டிக்கொள்ள விரும்பவில்லை. தேவையில்லாத விடயத்தைப் பேசி காலத்தை வீணடிக்கக் கூடாது." என்றார். (ந-7,10)


**கனகலிங்கம் திலகவதி**
**NLB, DLB**
22 மற்றும் 23ஆம் திகதிகளில் **5 இலட்சம் ரூபாய்** பணப் பரிசு **கனகலிங்கம் திலகவதி** மூலம் வெல்லப்பட்டுள்ளது.
**அதகோடிபதி 2 இலட்சம் ரூபாயும் கொவிசெத 1 இலட்சம் ரூபாயும் தனநிதானய 1 இலட்சம் ரூபாயும் மெகாபவர் 1 இலட்சம் ரூபாயும்** இரு தினங்களிலும் இவர்கள் மூலம் வெல்லப்பட்டுள்ளது
**யாழ்.நகரில் விரையுங்கள் கனகலிங்கம் திலகவதி லொத்தர் கூடுகளிற்கு**
நயினையில் தொடரும் அமுத சுரபி
யாழில் தொடரும் அதிஷ்ட சுரபி
விசேட ரிக்கற்றுக்கள் மொத்தமாக கொள்வனவு செய்ய
077 603 1723 (C-0670)



மஹஜன சம்பத
திகதி 2024.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 5513
P 0 6 4 2 0 6
அத சம்பத P 4 2 0 6
சீட்டிழுப்பு இலக்கம் 088

தன நிதானய
திகதி - 2024.06.23
சீட்டிழுப்பு இலக்கம் - 1543
Z 05 29 39 60 Z
Double Chance 31355

மெகா பவர்
திகதி 23/06/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1861
P 11 06 39 65 79
17164

லக்கி 7 VIP
திகதி 2024.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 0339
K 8 3 9 2 3 0 K

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3755
சீட்டிழுப்பு திகதி 23.06.2024
M 08 09 48 72
M 72205

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.06.23
சீட்டிழுப்பு இலக்கம் 0822
மிதுனம் 05 08 19 52 மிதுனம்
02862 08

உத்தியோகபூர்வ முடிவுகள்
23.06.2024 வெற்றி வாரம் 221 வர்ணம் பழுப்பு
G 3 0 2 8 3 0
54579
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.20,213,612.00

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2487 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 23.06.2024 தினம் ஞாயிறு
13 43 50 67 E
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 94,903,953.60

சனிதா
திகதி 2024.06.23 வெற்றி வாரம் 4648
15 20 65 74 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.62,524,380.80
73875

சசிரி
493
2024.06.23
கபிலம்
06 15 42
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,262,520/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4199 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.06.23 தினம் ஞாயிற்றுக்கிழமை
06 12 60 62 மகரம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,847,820.00
102850

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 01 26 45 48 60
1663 மஞ்சள் 23.06.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 529,204,270.20

ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2313
சீட்டிழுப்பு திகதி : 2024.06.23
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 122,292,967.20
ADA KOTIPATHI
21 31 62 63 Z
647450


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

**ஆகாஸ் நகை மாடம்**

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, காரைநகர், வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (C-0667)

076 825 7716 (ஆகாஸ்)


## புதிய சுற்றறிக்கை...

செய்து கல்வியில் சம வாய்ப்புகளை உறுதிப்படுத்தும் வகையில் இன்று ஜுன் 24ஆம் திகதி புதிய சுற்றறிக்கை வெளியிடப்பட வுள்ளது.

கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவினால் முன்வைக் கப்பட்ட மேற்படி சுற்றறிக்கைக்கு இம் மாதம் 20ஆம் திகதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

பிறப்புச் சான்றிதழ் இல்லாவிட்டாலும், ஏற்றுக்கொள்ளக்கூடிய வயதை உறுதிப்படுத்தும் ஆவணங்கள் இருந்தால், அந்தக் குழந்தைக்கு எந்த வித அநீதியும் ஏற்படாத வகையில் சேர்க்கப் பட வேண்டும் என்று புதிய சுற்றறிக் கையில் கூறப்பட்டுள்ளது.

புதிய சுற்றறிக்கையின்படி, விண்ணப் பதாரர்கள் முறைகேடுகள் செய்ய முடி யாது. மேலும் பல்வேறு யோசனைகள் மற்றும் ஆலோசனைகளை கருத்திற்கொ ண்டு முன்னைய சுற்றறிக்கைகளின் குறைபாடுகளை நிவர்த்தி செய்யும் வகை யில் மேலும் பல திருத்தங்கள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாக அமைச்சின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார். (ந-7,10)

## நாளை மறுதினம்...

நிலைமை மற்றும் வெளிநாட்டு கடன் மறுசீரமைப்பில் ஏற்பட்டுள்ள முன்னே ற்றம் குறித்து ஜனாதிபதி இதன்போது மக்களுக்கு தெரியப்படுத்தவுள்ளதாக தெரியவருகிறது.

இதேவேளை ஜனாதிபதியின் உரை யில் மக்களுக்கு பல நிவாரணங்கள் கிடைக்கும் என ஐக்கிய தேசியக் கட்சியின் தேசிய செயலாளர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார். (ந-7,10)

## யதார்த்தமற்ற...

வது கவலையளிப்பதாக நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப் பிட்டுள்ளார்.

அமைச்சர் தனது எக்ஸ் தளத்திலேயே இது குறித்துப் பதிவிட்டுள்ளார்.

கடின உழைப்பால் உருவாக்கப்பட்ட சீர்திருத்தங்களை மாற்றுவது நாட்டிற்கு பேரழிவை ஏற்படுத்தும் எனவும் அவர் எச்சரித்துள்ளார்.

மேலும் அவர் தனது எக்ஸ் தளத்தில் பதிவிட்டுள்ளதாவது,

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் பெரும் பாதிப்பை சந்தித்திருந்த இலங் கையின் பொருளாதாரத்தை மறுசீரமைப் பதில் சர்வதேச நாணய நிதியம் மற்றும் சர்வதேச பங்குதாரர்கள் முக்கிய பங்கு வகித்துள்ளனர்.

குறுகிய கால ஆதாயங்களைக் கூட வழங்காத வாக்குறுதிகளை வழங்கு வதைத் தவிர்க்குமாறு அனைத்து எதிர்க்கட்சிகளையும் அவர்களின் ஆலோசகர்களையும் நான் கேட்டுக்கொள் கிறேன்.

காலத்தின் தேவை நாட்டின் ஸ்தி ரத்தன்மையே தவிர, அரசியல் விளை யாட்டுகள் அல்ல. நமது பொருளாதாரக் கொள்கைகள் உறுதியான மற்றும் யதா ர்த்தமான கொள்கைகள். உலகளவில் ஏற் றுக்கொள்ளப்பட்ட சிறந்த நடைமுறை ளுடன் பொருளாதார நிலப்பரப்பின்வடி வமைப்பை அடிப்படையாகக் கொண் டவை என்பதை உறுதிப்படுத்த வேண்டும் என நிதிஇராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க வலியுறுத்தினார். (ந-7,10)


**பிரியாணிக் கடை**

உயர்தர பாஸ்மதி அரிசி
சிக்கன் பிரியாணி - 950/=
வீட்டு விநியோகம் - 200/= முதல் (108)

K.K.S வீதி, இணுவில்
077 104 1923

**வேலையாட்கள் தேவை**

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனம் ஒன்றிற்கு கணக்கீடு அனுபவமுள்ள கணக்கீட்டாளர் மற்றும் website design அனுபவமுள்ள (ஆண், பெண்) இருபாலாரும் விரும்பத்தக்கது. (வயது எல்லை இல்லை) சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (0110)

077 839 3974
077 606 1333

**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ். மல்லாகம் சந்திக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் அனைத்து வசதிகளுடனும் கூடிய புதிய மேல்மாடி வீடு வாடகைக்கு உண்டு. (1319)

076 41 28 104

**வேலையாள் தேவை**

சமையலறை உதவியாளர்
வயது 19 - 45 ஆண்
நாளொன்றுக்கு ரூ.2000/= (108)

K.K.S வீதி, இணுவில்
076 293 5195

**Care Giver - பராமரிப்பாளர்**

கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை
பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma

கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - விசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)

CIMS College
49A, Chapel Street, Jaffna.
(C-0669)

College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

**அனைத்து நாடுகளுக்குமான விமான பயணச்சீட்டுக்கள் குறைந்த விலையில்**

- Air Ticket Date Change
- Travel Insurance
- Online Visa Appoinments
- Travel Itinerary
- Sri Lanka Visa Extension
- All Country Visa Services

(C-0669)

உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்

கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை

V2 TRAVELS 0768226240 0768226241

**V2 VISA SERVICES**
**கனடா**

077 77 20 322
077 77 19 322

Visit Visas
Air Tickets

- கனடா PASSPORT APPOINMENTS

**விமான பயணச்சீட்டுக்கள்**

- Student Visas
- Online Appointments
- இந்தியா Visas
- Online Visas - All countries
- Police Clearance
- Travel Insurance

Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-0669)

**பதவி வெற்றிடம்**

- தமிழ் ரைப்பிங் மற்றும் பக்க வடிவமைப்பு (இருபாலாரும்)
- உதவி ஆசிரியர் (இருபாலாரும்)
- தகைமை:- க.பொ.த உயர்தரம் கற்றிருத்தல்
- பொருத்தமானவர்கள் **076 097 3121** எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.
- யாழ் நகரிலிருந்து 7Km தூரத்திற்குள் இருப்பவர்கள் மட்டும்.

- பொது முகாமையாளர்
வலம்புரி

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் கைதடி சந்தி அருகாமையில் A9 வீதி முகப்புடன் 10 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- இருபது அடிப்பாதை (20)
- கைதடி சந்தி 100m தூரம்
- சித்த வைத்தியசாலை முன்பாக
- பார்வை நேரம் காலை 6 மணி தொடக்கம் மாலை 6 மணி வரை
- காணி கொள்முதல் செய்பவருக்கு பிரதேச சபை அனுமதி பெற்றுக்கொடுக்கப்படும்.
- ஒரு பரப்பின் விலை ரூபா இருபது இலட்சம் 20,00,000/=

(1321)

Golden Real Estate (pvt) Ltd
077 029 4164,
077 329 4130, 077 294 1521


## அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம்
09.12.1957

மறைவு
26.05.2024

கடந்த 26.05.2024 அன்று சிவபதமடைந்த
எங்கள் குடும்பத் தலைவி

அமரர்

**திருமதி செல்வராணி தங்கவேலாயுதம்**

அவர்களின் அந்தியேட்டி வீட்டுக்கிருத்திய நிகழ்வும் ஆத்ம சாந்திப் பிரார்த் தனையும் நாளை 25.06.2024 செவ்வாய்க்கிழமை அன்னாரின் இல்லத் தில் மு.ப 10.00 மணியளவில் நடைபெறும். அந் நிகழ்விலும் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும். (C-0668)

சந்தை மேற்கு ஒழுங்கை,
[illegible]

இங்ஙனம் :
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தினால் இல. [illegible] யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 24.06.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.